ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2492/28 - 2026 ජූනි මස 10 වැනි බදාදා - 2026.06.10

2492/28 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

தேசிய நீர் வளங்கள் கொள்கை

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
இலங்கை அரசு

2026.05.05

இலங்கையின் நீர் வளத்தின் நிலைபேறான இருப்பை உறுதிப்படுத்துவதற்கு சவாலாக உள்ள பிரச்சினைகளை தெளிவாக இனங் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குதல் தொடர்பான கொள்கையை பிரகடனப்படுத்தும் பொருட்டு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் 2026.05.05 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய நீர் வளங்கள் கொள்கை இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

2025 யூலை மாதம் 02 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் අමප/25/1065/802/17 இன் பிரகாரம், தற்சமயம் அமுலில் உள்ள தேசிய நீர் வளங்கள் கொள்கையை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்தி புதிய தேசிய நீர் வளங்கள் கொள்கையை தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திருத்தப்பட்ட தேசிய நீர் வளங்கள் கொள்கைக்கு 2026.05.05 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் අමප/26/0792/808/036 இன் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கே. டீ. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
எண் 80/5, "கோவிஜன மந்திரயா"
ரஜமல்வத்த ஒழுங்கை,
இராஜகிரிய.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

தேசிய நீர் வளங்கள் கொள்கை

2026 - பெப்ரவரி

தேசிய நீர் வளங்கள் கொள்கை

அமுல்படுத்தப்பட்ட திகதி : .....

ISBN : .....

அச்சு : .....



இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

தேசிய நீர் வளங்கள் கொள்கை

2026

உள்ளடக்கம்

பக்கம்

1. அறிமுகம்.....5

2. நியாயப்படுத்துகை.....7

3. விடயப் பரப்பு.....8

4. கொள்கையின் யதார்த்தம் :.....8

5. கொள்கையின் நோக்கங்கள்.....8

6. கொள்கை கோட்பாடுகள் :.....9

7. கொள்கை பிரகடனங்கள்.....10

7.1. அரசின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்.....10

7.2. பலனாடைவோரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்.....11

7.3. நீர் பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பொறுப்புகள்.....11

7.4. நீர் வளங்களின் திட்டமிடுகை, மேம்படுத்துகை, நிர்வகிப்பு மற்றும் பாதுகாப்பு.....11

7.5. தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நீரின் அளவுகளை ஒதுக்கீடு செய்தல்...12

7. 6. பல்வேறு நீர் பயன்பாடுகளின் செயற் திறனையும், உற்பத்தித் திறனையும் உயர்த்துதல்.....13

7. 7. பாதுகாப்பு, முகாமைத்துவம், செயற்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகளை பகிர்ந்தளித்தல்.....13

7. 8. தரவு மற்றும் தகவல் முகாமைத்துவம்.....13

7.9. ஆராய்ச்சி மற்றும் விருத்தி.....14

7.10. பயிற்சி மற்று கொள் திறன் மேம்பாடு.....14

8. செயற்படுத்தும் பொறிமுறை.....15

8.1.1 பணிப் பொறுப்பு.....15

8.2.1 பணிப் பொறுப்பு.....16

8.3. தேசிய நீர் வளங்கள் செயலகம் (NWRS).....17

8.3.1. பணிப் பொறுப்பு.....17

8.3.2. உள்ளடக்கம்.....18

9.0. மேன் முறையீட்டு செயன் முறை

பின்னிணைப்பு.....19

தேசிய நீர் வளங்கள் கொள்கை

தொலை நோக்கு :

"நீர் வளத்தை பாதுகாக்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் பாரம்பரியத்தையும், சம நிலையான சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கான நோக்கத்தையும் தொடர்ச்சியாகப் பேணிச் செல்லும் வகையில், நிலைத்த நீர் வளப் பயன்பாட்டின் மூலம் முன்னேறியுள்ள நாட்டை நோக்கி..."

1. அறிமுகம்

1.1 மனிதனின் வாழ்வாதாரத்திற்கும், அவ்வாறே பூமியில் வாழும் பிற அனைத்து உயிரினங்களினதும் நிலைத்த வாழ்விற்கும் இன்றியமையாது தேவையான இயற்கை வளங்களில் நீர் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. பூமியின் மேற் தளத்தில் சுமார் 70% ஆன பகுதி நீரினால் மூடப்பட்டிருந்த போதிலும், பல்வேறு வகையான பயன்பாடுகளுக்குத் தகுந்தவாறு நிலத்தின் மேற் தளத்திலும், நிலத் தடியிலும் காணப்படுகின்ற நீரினளவு ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

1.2 இலங்கைக்கு வருடாந்தம் மழை வீழ்ச்சியின் வாயிலாக கிடைக்கின்ற மொத்த நீரினளவை, உலகின் ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை 'நீரினால் செழிப்பான' நாடாகக் காணப்படுவதாக அவதானிக்கலாம். எனினும், பூகோளவியல் வேறுபாடுகள் மற்றும் பருவப் பெயர்ச்சி காற்றின் இடமாற்றத்தின் அடிப்படையில் மழை வீழ்ச்சிப் பரம்பலிலும், நீர் கிடைக்கப் பெறுகின்ற தன்மையிலும் குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் காணப்படுகின்றன.

1.3 இக் காலநிலை மாறுபாடுகளுக்கு இலங்கை திறம்பட எதிர் கொள்ளும் முகமாக, *"இத்தகைய நாட்டில் மழையினால் உருவாக்கப்படுகின்ற நீரிலிருந்து ஒரு துளியேனும் மக்களுக்குப் பயனின்றி கடலுக்குச் செல்லாதிருக்கட்டும்!"* என மகா பராக்கிரமபாகு மன்னன் தெரிவித்த கூற்றை சிரமேற் கொண்டு, சுற்றுச் சூழலை பாதுகாத்த வண்ணமும், அதன் புவியியல் மாறுபாடுகளை பயனுறச் செய்த வண்ணமும், மிகச் சிறந்த அடிப்படையில் நீர் வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டிருகின்றது என்பதற்குத் தெளிவான அத்தாட்சிகள் இன்றளவிலும் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய நடவடிக்கைகள், குடியியல் நீர் விநியோகிப்பு, கைத்தொழில் துறை மற்றும் பிற துறைகள் தொடர்பாக முனைப்பான பங்களிப்பை வழங்குகின்ற பாரிய குளங்கள், அணைக்கட்டுகள், பிரம்மாண்டமான கால்வாய்கள் மற்றும் சிறு குளங்களை உள்ளடக்கிய அடுக்கடுக்கான நீரோட்டத் தொகுதிகள் ஆகியன காணப்படுகின்றன.

1.4 இந் நாட்டுக்குக் கிடைக்கின்ற சராசரி ஆண்டு மழை வீழ்ச்சி சுமார் 2000 மில்லி மீற்றர்களாகக் காணப்படுகின்றது. இதன் வாயிலாகக் கிடைக்கின்ற மொத்த நீரினளவு சுமார் 130 பில்லியன் கன மீற்றர்களாகும். நீர் மற்றும் விவசாயம் தொடர்பான உலகளாவிய தகவல் தொகுதியின் (FAO – AQUASTAT – 2023) தரவுகளின் பிரகாரம், இலங்கையிலுள்ள நீண்ட கால, வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க மேற்தள நீர் வளத்தின் அளவு 52 பில்லியன் கன மீற்றராகவும், நிலக் கீழ் நீரினளவு 7.8 பில்லியன் கன மீற்றராகவும், மேற்தள நீர் மற்றும் நிலக் கீழ் நீருக்கிடையிலான ஒட்டு மொத்தப் பகிர்வு 7 பில்லியன் கன மீற்றர் ஆகவும் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில், இலங்கையிலுள்ள வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க மொத்த நீர் வளத்தின் அளவு 52.8 பில்லியன் கன மீற்றர்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

1.5 இந் நாட்டின் நிலப் பரப்பில் 90% க்கும் அதிகமான பகுதி 103 ஆற்றுப் பள்ளத்தாக்குகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மீதமுள்ள நிலப் பரப்பு சுமார் 65 சிறிய கடலோர நீரோட்டப் பகுதிகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மேலும், தற்சமயம் ஒரு சில ஆற்றுப் பள்ளத்தாக்குகளைத் தவிர்த்து, எஞ்சிய பள்ளத்தாக்குகளில் பல்வேறு கொள்ளளவுகளைக் கொண்ட பெருமளவான குளங்கள், அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்த் தொகுதிகள் நிர்மாணிக்கப்படுள்ளன. இதே வேளை, நீர் பற்றாக்குறை நிலவுகின்ற ஆற்றுப் பள்ளத்தாக்குகள், தமக்குரிய தனித்துவமிக்க நீரேந்து பிரதேசங்களிலிருந்து கிடைக்கின்ற நீருக்குப் புறம்பாக, இடை ஆற்றுப் பள்ளத்தாக்கு திசை மாற்றங்களின் வாயிலாகவும் ஊட்டப்படுகின்றன. நாட்டில் பெருமளவான பகுதியை உள்ளடக்குகின்ற ஆற்றுப் பள்ளத்தாக்குகளிடையே நிலவுகின்ற இக் கூட்டிணைந்த தொடர்பு காரணமாக இலங்கையின் மொத்த நிலப் பரப்பையும் தனியொரு சுற்றுச் சூழல் தொகுதியாகக் கருத முடிகின்றது.

1.6 மேலும், அளவியல் ரீதியாக நீரை பயன்படுத்துகின்ற துறைகளிடையே, விவசாயத் துறை, நகர்ப்புற மற்றும் குடியியல் நீர் விநியோகம் மற்றும் தொழிற் துறை ஆகிய துறைகள் முன்னுரிமை பெறுகின்றன. நீர் மற்றும் விவசாயம் தொடர்பான உலகளாவிய தகவல் தொகுதியின் (FAO – AQUASTAT 2023) தரவுகளின் பிரகாரம், ஆண்டு தோறும் பயன்படுத்தப்படுகின்ற சுமார் 13 பில்லியன் கன மீற்றர் அளவிலான மொத்த நீரளவில், சுமார் 87% ஆன பங்கு விவசாயத் துறைக்கும், 6% ஆன பங்கு நகர்ப்புற மற்றும் குடியியல் நீர் விநியோகத்திற்கும், 6% ஆன பங்கு கைத்தொழில் துறைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

1.7 தொண்டு தொட்டு பெரும்பாலும் விவசாயம் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நீர், காலப் போக்கில் தொழிற் துறை வளர்ச்சி, தொழில்நுட்ப விருத்தி, வாழ்வாதார மேம்படுத்துகை போன்ற இன்னோரன்ன காரணங்களினால் பல்வகைப் பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, நீர்மின் உற்பத்தி, குடியியல் மற்றும் நகர்ப்புற நீர் விநியோகம், தொழிற் துறை மற்றும் சேவைத் துறைகள் சார்ந்ததாகவும், பொழுது போக்கு மற்றும் சுற்றுலாத் துறை போன்ற துறைகள் சார்ந்ததாகவும் நீர்த் தேவைகள் பல் வகைமை பெற்றுள்ளது. இதனடிப்படையில், இன்றளவில் விருத்தி நிலையிலான நீர் வளங்களுக்கான தேவை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. மேலும் எதிர்க்காலத்தின் பல்வகைத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில், நீர் வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை முன்னெடுக்கும் முகமாக காலத்துக்குக் காலம் நிறுவப்பட்ட பல்வேறு நிறுவனங்களை

உள்ளடக்கிய தனியொரு நிறுவன வலையமைப்பு காணப்படுகின்றது. எனினும், இந் நிறுவனங்களின் விடயப் பரப்பு மற்றும் சட்ட ரீதியான செயற் பணிகளிடையே முரண்பாடுகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

1.8 மேலும், காலநிலை மாற்றத்தின் காரணமாக தோற்றம் பெற்ற வண்ணமுள்ள மழை வீழ்ச்சிப் போக்கின் மாற்ற நிலைகள் அதிகரித்தல், வரட்சி, வெள்ளப் பெருக்கு நிலை மற்றும் மண் சரிவு போன்ற அனர்த்த நிகழ்வுகள் அதிகரித்தல் போன்ற விடயங்கள் பிரதான சவால்களாகக் காணப்படுகின்றன. இது தவிர, நிலக் கீழ் நீர் வளம் குறைவடைதல், விவசாய, தொழிற் துறை மற்றும் குடியியல் கழிவுகள் காரணமாக நீரின் தராதர நிலை குறைவடைதல் போன்ற விடயங்களும் நீர் வளங்களுடன் கூட்டிணைந்ததாக அதிகரித்த வண்ணமுள்ள முக்கியமான பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. எனவே, இலங்கையின் நீர் வளத்தின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு சவால் மிக்க பிரச்சினைகளை தெளிவாக அடையாளம் கண்ட வண்ணம் அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு துரிதமாக கொள்கை ரீதியிலான தலையீடு அத்தியாவசியமாகின்றது.

2. நியாயப்படுத்துகை

தேசிய நீர் வளங்கள் கொள்கையை நிலை நிறுத்தும் பொருட்டு காலத்துக்குக் காலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை இதுவரை நடைமுறையில் செயற்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டு வர முடியாதுள்ளது. எனவே, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சவால்கள் மற்றும் தேவைகளுக்கு முகங் கொடுப்பதற்கு தேசிய நீர் வளங்கள் கொள்கை காணப்பட வேண்டியிருப்பதாக புரிந்து கொள்ளலாம்.

2.1 நீரியல் தரவுகளின் பிரகாரம், ஒட்டு மொத்தமாக இந் நாட்டில் எவ்வித நீர்த் தட்டுப்பாடும் காணப்படாதிருப்பினும், கால நிலை மாற்றங்களினாலான தாக்கம் காரணமாக பருவப் பெயர்ச்சி மற்றும் இடை பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சியில் காணப்படுகின்ற மாறுபாடுகளும், புவியியல் ரீதியான வித்தியாசங்களும், ஆண்டிற்கிடையிலான மழை வீழ்ச்சியின் அதி கூடிய மாற்றங்கள் காரணமாகவும் நாட்டின் ஒரு சில பிரதேசங்களில் நீர் அதிகளவிலும், ஒரு சில பகுதிகளில் நீர்த் தட்டுப்பாட்டு நிலைகளும் ஏற்படுதல்.

2.2 நகரமயமாக்கம், கைத்தொழிற் துறையின் விரிவாக்கம், விவசாயத் துறையின் பல் வகைப்படுத்தல், சுற்றுலாத் துறையின் வளர்ச்சி, பொழுது போக்குத் தேவைகள் போன்ற காரணிகளால் பொருளாதார நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. இதன் விளைவாக, தற்போது நிலவுகின்ற நீர் வளங்களும், நீர் நிலைகள் சார்ந்த பயன்பாடுகளின் தேவைகளும் பல்வகைப்படுத்தப்பட்ட வண்ணம் நீர்த் தேவை தொடர்ந்து அதிகரித்தல்.

2.3 தேசிய தேவைகளை கருத்திற் கொண்ட வண்ணம், மேற் தள நீர் வளங்களை திட்டமிடுதல், அதனை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தல், நிலக் கீழ் நீர் வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் நீர் வளத்தை போதியளவிலும், நியாயமான வகையிலும் மற்றும் சமமான அணுகலை எட்டக் கூடிய நிலையை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகவிருத்தல்.

2.4 உயிரினங்களின் நிலைப்பாட்டுக்கு அத்தியாவசியமான காரணியான மற்றும் வரையறுக்கப்பட்ட வளமான நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாக எமது நாடு எதிர் நோக்கும் பிரதான சவால்களாவன˙

I. பல்வேறு நிறுவன ரீதியிலான நோக்கங்கள் தொடர்பாக நிறுவப்பட்டுள்ள சிக்கலான நிறுவன கட்டமைப்புகளை, பொதுவான தேவைகளின் அடிப்படையில் தேசிய ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் பயனுள்ள முறையில் ஒருங்கிணைத்தல்.

II. காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட வண்ணமுள்ள நீர் வளங்களின் அதிகளவான மாற்றங்களை திறம்பட முகாமைத்துவம் செய்தல் (உதாரணம் : ஈர வலயத்துக்கு மழை வீழ்ச்சி அதிகரித்தல் மற்றும் உலர் வலயம் மென்மேலும் வறண்டதாக மாறுதல்).

III. அதிகரித்து வரும் சனத் தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதன் வாயிலாக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

IV. அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை அணுகுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல்.

V. நகர்மயமாக்கல், சனத் தொகை வளர்ச்சி மற்றும் கைத்தொழில் துறை விரிவாக்கம் காரணமாக ஏற்படக் கூடிய நீர் மாசாக்கத்தை கட்டுப்படுத்துதல்.

VI. நீர் மின் உற்பத்தி, கைத்தொழிற் துறை வளர்ச்சி, சுற்றுலா நடவடிக்கைகளின் விரிவாக்கம், குடியியல் நீர் விநியோகிப்பு வசதிகளின் மேம்பாடு, உள்ளூர் மீனவ செயற்பாடுகள் போன்ற நீர்த் தேவைகள் காரணமாக, அதிகரித்து வருகின்ற நீர்த் தேவையை முகாமைத்துவம் செய்தல்.

VII. மேலே விளக்கப்பட்டுள்ள நீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் முயற்சிகளுடன் கூட்டிணைந்து, சுற்றுச் சூழல் சமநிலையையை பேணும் மற்றும் நீர் மூலாதாரங்கள் மற்றும் நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதன் தீவிர நிலை மேலெழுந்துள்ளது.

அதனடிப்படையில், நீர் வளங்களை அண்டிய தோற்றுவாய்களை நன்னெறி மிக்கதாக பயன்படுத்திய வண்ணம் இலங்கையை நிலையான அபிவிருத்தி இலக்குகளையுடைய நாடாக கட்டியெழுப்பும் முகமாக, நீர் வளத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு துறைகள் சார்ந்ததாகவும் ஈடுபடுத்தக் கூடிய முதலீடுகளை சிக்கனமாக பயன்படுத்திய வண்ணமும், ஒட்டு மொத்த தேசிய அணுகு முறையின் அடிப்படையில் இசையத் தக்கதாக நீர் வளங்களை பயன்படுத்தும் முகமாகவும், நீர் வள முகாமைத்துவம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது அரசாங்கம், தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் பயனாளிகளுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும், பரஸ்பர புரிந்துணர்வையும் கட்டியெழுப்பும் முகமாக பரந்து பட்ட தேசிய நீர் வளங்கள் கொள்கையின் தேவை மற்றும் அதனை வலுப்படுத்தும் பொருட்டு சட்ட ரீதியான வடிவமைப்பின் அவசியம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

3. விடயப் பரப்பு

தேசிய நீர் வளங்கள் கொள்கை, இலங்கையின் தேச எல்லைகளுக்குள் உள்ள கடல் நீரைத் தவிர்ந்த ஏனைய அனைத்து நீர் வளங்களுக்கும் பொருந்தும்.

4. கொள்கையின் யதார்த்தம் :

1. நீர் வளத்துடன் தொடர்புடைய உள் நாட்டு பாரம்பரிய மரபுரிமை மற்றும் வரலாற்று ரீதியான அனுபவங்களையும், நவீன தொழில்நுட்ப அணுகு முறைகளையும் பொருத்தமான வகையில் கூட்டிணைத்த வண்ணம், ஒருங்கிணைந்த பிரவேசிப்பின் ஊடாக நிலைத்த நீர் வளங்கள் திட்டமிடல், அபிவிருத்தி, திறன் மிக்க பயன்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

2. சமூக - பொருளாதார அபிவிருத்தியை முன்னிறுத்தி, அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் வளப் பயன்பாடுகளையும், புதிய நீர் வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளினது நீர்த் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய உபாய வழித் திட்டங்களை, உள் நாட்டு ரீதியாக மதிப்பிடக் கூடிய ஒருங்கிணைந்த பிரவேசிப்புடன் கூடியதாக முன்னெடுத்தல்.

5. கொள்கையின் நோக்கங்கள்

(1) அனைத்து வகையான நடப்பு மற்றும் எதிர்க் கால நீர் பயன்பாட்டுத் தேவைகளை கருத்திற் கொண்டு, அனைத்து பயனாளிகளுக்கும் நீர் வளத்திற்கான நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதி செய்தல்.

(2) மேற் தள மற்றும் நிலக் கீழ் நீரின் தராதர நிலை மற்றும் நீர் சார்ந்த சுற்றுச் சூழல் தொகுதிகள் மற்றும் நீரேந்து பிரதேசங்களை பாதுகாத்தல், மீள் நிலை நாட்டுதல் மற்றும் உறுதிப்படுத்துதல்.

(3) நீர் வள மாசுபாட்டையும், வீணாவதையும் தடுக்கும் முகமாக குடிமக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்துதல், விழிப்புணர்வூட்டுதல் மற்றும் கண்காணித்தல்.

(4) நிலக் கீழ் நீர் வளத்தின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில், அதிகப்படியான பயன்பாட்டைத் தவிர்த்தல், நீர் மீள் நிரப்பு நடவடிக்கைகள் மற்றும் நிலக் கீழ் நீர் நிதியங்களின் கீழ் தங்கியதாக நிலக் கீழ் நீர் வளத்தை வினைத் திறன் மிக்கதாக அபிவிருத்தி செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

(5) தேவைக்கேற்ப நீரை விநியோகிக்க முடியாத சந்தர்ப்பங்களில், நீர் பயன்பாட்டிற்கான முன்னுரிமைகளை நிர்ணயித்தல், நீரின் பகிர்வு மற்றும் பயன்பாட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் சவால்களை முகாமைத்துவம் செய்தல்.

(6) காலநிலை மாற்றங்கள் காரணமாக நீர் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் ஏற்படக் கூடிய தாக்கங்களை எதிர் கொள்ளும் திறனை மேம்படுத்துதல்.

(7) நீர் வளத்துடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் கருத்திற் கொண்டு, ஒருங்கிணைந்த மற்றும் விரிவான அணுகு முறையின் கீழ் தேசிய, மாகாண மற்றும் பிரதேச ரீதியான தேவைகளையும் கருத்திலெடுத்த வண்ணம், தேசிய ரீதியாக முடிவெடுக்கக் கூடிய பொறிமுறையையும், செயலாக்க மற்றும் கண்காணிப்பு பொறிமுறையையும் நிலை நிறுத்துதல்.

(8) அளவியல் ரீதியாக, நீர் வளம் தொடர்பாக முடிவெடுக்கக் கூடிய ஒவ்வொரு துறை சார்ந்ததாகவும் தரவுகள் மற்றும் தகவல்களை பரிமாற்றிக் கொள்ளும் முகமாக மையப்படுத்தப்பட்ட செயன் முறையொன்றை நிலை நிறுத்துதல்.

(9) நாட்டின் அபிவிருத்திக்காக பயனுள்ள வகையில் ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய நீர் வளத்துடன் தொடர்புபட்ட மர புரிமைகள் மற்றும் கலாச்சாரங்கள் போன்ற சாத்தியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதான புதிய பரிமாணங்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்ந்தல்.

(10) நீர் வள அபிவிருத்தி, முகாமைத்துவம், பயன்பாடு மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளை உள்ளடக்கும் வகையில் நடை முறையில் உள்ள சட்ட திட்டங்களை திருத்துதல், மரபு ரீதியான மற்றும் நவீன தொழில்நுட்ப உத்திகளை பொருத்தமான வகையில் பயன்படுத்துதல் மற்றும் நிறுவனங்களை மீள் கட்டமைத்தல் அல்லது அவற்றை வலுவூட்டுதல்.

6. கொள்கை கோட்பாடுகள் :

தேசிய நீர் வளங்கள் கொள்கை பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

6.1 நீர் வளம் இலங்கை அரசுக்கு உரித்தானதாகக் காணப்படுவதுடன், அரசு அதன் பொறுப்புடைமையை வகிக்க வேண்டும்.

6.2 நீர் எனப்படுவது, உயிரினங்களின் வாழ்வுக்கும், சுற்றுச் சூழல் தொகுதிகள் மற்றும் மனிதச் செயற்பாடுகளை நன்னெறி மிக்கதாக கொண்டு செல்வதற்குத் தேவையான கவனத்துக்கு உட்படுத்தப்பட்ட வண்ணமுள்ள புதுப்பிக்கத்தக்க இயற்கை வளமாக அங்கீகரிக்கப்படுத்தல் வேண்டும்.

6.3 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வகையில், "பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடி நீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கான அணுகல;" எனும் விடயம் மனித உரிமையாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

6.4 அனைத்து உயிரினங்களினதும், சுற்றுச் சூழல் தொகுதிகளினதும் நிலைத்த இயங்கு நிலைக்குத் தேவையான போதியளவான நீர் கிடைக்க வேண்டும் எனும் விடயம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

6.5 இந் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் முகமாக, பல் வகைப்படுத்தப்பட்ட நீர்த் தேவைகளையும், கேள்வியையும் பூர்த்தி செய்வதற்குத் தேவையான புதிய நீர் வளங்களின் விருத்தி மற்றும் நீர் வளங்கள் மற்றும் நீருடல்களின் பயன்பாட்டின் செயற் திறன், உற்பத்தித் திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

6.6 நீர் வளத் திட்டமிடல், அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயங்கள், பிரதேச ரீதியான சம நிலையை பேணக் கூடிய வண்ணம் முன்னுரிமைகள் மற்றும் தனித் தன்மையை கருத்திற் கொண்டு, மாறுபாடுகளை குறைக்கும் வகையில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

6.7 நீர் தோற்றுவாய்கள், நீர் மூலாதாரங்கள் மற்றும் நீரேந்து பிரதேசங்கள் சார்ந்த மாசாக்கம், அழிவு மற்றும் நீர் மூலாதாரங்களிலிருந்து அத்து மீறிய நீர் அகத்துறிஞ்சல் போன்ற விடயங்களை கண்காணிப்பதன் ஊடாக அனைத்து நீர் தோற்றுவாய்களும், நீர் மூலாதாரங்களும் சிறப்பாக பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

6.8 கழிவு நீர் சுத்திகரிப்பு, மீள் சுழற்சி மற்றும் மீள் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6.9 உலக மரபுரிமைகள் மற்றும் தேசிய பாரம்பரியங்களாகக் கருதப்படுகின்ற மழைக் காடுகள், ஈர நிலங்கள், வன ஒதுக்கீடுகள் மற்றும் நீர்ப்பாசனத் துறையுடன் தொடர்புடைய நீர் வளங்களினதும், நீர்ப் பிடிப்பு பிரதேசங்களினதும் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் அவற்றின் நிலைத் தன்மையை பராமரித்தல் தேசிய பொறுப்பாகக் கருதி அதற்குகந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

6.10 காலநிலை மாற்றங்கள் காரணமாக நீர் வளத் துறைக்கு ஏற்படக் கூடிய மித மிஞ்சிய தாக்கங்களை குறைக்கும் முகமாக, பொருத்தமான பிராந்திய ரீதியான மற்றும் தேசிய ரீதியான இயைபாக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

6.11 நீர் வளங்கள் முகாமைத்துவம் எனப்படுவது, ஒரு முழுமையான பொறுப்பாகக் காணப்படுவதால், நீர் வளங்கள் திட்டமிடல், அபிவிருத்தி, பயன்பாடு மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய அனைத்து விடயப் பரப்புகளையும் கருத்திலெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஒருங்கிணைந்த மற்றும் பங்கேற்பு அணுகு முறையை அடிப்படையாகக் கொண்ட வலுவூட்டப்பட்ட நிறுவனக் கட்டமைப்பின் ஊடாக நீர் வளங்கள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

7. கொள்கை பிரகடனங்கள்

இக் கொள்கையின் வாயிலாக எதிர்ப்பார்க்கப்படுகின்ற நோக்கங்களை அடையும் பொருட்டான கொள்கை பிரகடனம் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

7.1 அரசின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்

நாட்டின் முழு மொத்த குடி மக்களுக்காக நீர் வளங்களின் பொறுப்புடைமையை ஏற்றல், அதனை பொது மக்களினதும், சுற்றுச் சூழல் தொகுதியின் நிலைத்த மற்றும் நன்னெறி மிக்க செயற்பாடுகள் தொடர்பாக ஒருங்கிணைந்த அணுகு முறையின் கீழ் திறம்பட திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதற்குத் தேவையான நிதி முதலீடுகள், தனி நபர், நிறுவன ரீதியிலான கொள் திறன் மேம்பாடு மற்றும் கண்காணிப்பு தொடர்பாகத் தேவையான சட்ட திட்டங்களை அமுலாக்குதல்.

தற்சமயம் நீர் வளத் துறை சார்ந்த முன்னுரிமை மிக்க பணிகளை நிறைவேற்றுகின்ற அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் பொறுப்புகளை வலுப்படுத்திய வண்ணம், உள் நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக

அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு இணங்கிய வண்ணம், தேசிய, மாகாண மற்றும் பிரதேச ரீதியான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சட்டக வரையறையினுள் இருந்தவாறு சட்ட ரீதியான பொறுப்புகளை கையளித்தல்.

ஒட்டு மொத்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கொள்கையை செயற்படுத்தக் கூடிய கோட்பாடுகளுக்கு இணங்க, தேசிய நீர் வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் காலத்துக்கேற்ற தேவைகளின் பிரகாரம் அதனை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

7.2 பலனாடைவோரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள்

இந் நாட்டின் நீர் வளங்களை பயன்படுத்துகின்ற அனைத்துத் தரப்பினரும், நீர் வளப் பயன்பாட்டின் அடிப்படையில் நேரடி அல்லது மறைமுக பலனாளிகளாகக் காணப்படுகின்றனர், மேலும், விவசாயத் துறை, குடியியல் பயன்பாடு, கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் போன்றவற்றிற்காக நீரை அளவியல் ரீதியாகப் பயன்படுத்துகின்ற தரப்பினரும், நீர்த் தோற்றுவாய்கள், நீர் நிலைகள் மற்றும் நீரியல் சூழலை சார்ந்த நீர் மின் உற்பத்தி, உள்ளக மீன் பிடித் துறை மற்றும் நீர் சார்ந்த கைத்தொழிற் துறை, சுற்றுலாத் துறை உள்ளிட்ட செயற்பாடுகளில் நீரை பயன்படுத்துகின்ற தரப்பினரும் நேரடி பலனாளிகளாகக் கருதப்படுவர். மேலும், இத்தகைய நேரடி பலனாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வோர் மற்றும் சேவை பயனாளிகள், மறைமுக பலனாளிகளாகக் கருதுதல்.

நீர் வளங்களை திறம்படவும், பயனுள்ள முறையிலும் பயன்படுத்துதல் மற்றும் நீர் மாசாக்கத்தை தடுத்தல் மற்றும் நீரின் தராதார நிலையை கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை நவீன அறிவியல் முகாமைத்துவ அணுகு முறைகளுக்கு இசைவாக மேற்கொள்ளுதல் மற்றும் வரலாற்று ரீதியாக நீருடன் கூட்டிணைந்த கலாச்சார மரபுரிமைகளுக்கு மதிப்பு வழங்கிய வண்ணம் செயற்படுதல்.

பங்கேற்பு அடிப்படையிலான முகாமைத்துவ அணுகு முறைகளுக்கு ஏற்புடையதாக இயைபாக்கமடைதல் மற்றும் நீர் வளங்கள் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் முகாமைத்துவம், செயற்படுத்துகை மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு பங்களிப்புச் செய்யும் முகமாக கூட்டாக பரஸ்பர ஒப்புதலுக்கு வரக் கூடிய செயன் முறைகளை பின்பற்றுதல்.

7.3 நீர் பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடி நீர் மற்றும் சுகாதார மிக்க நீருக்கான அணுகல் உரிமையை மனித உரிமையாக அங்கீகரித்தல்.

தற்சமயம் மேம்படுத்தப்பட்டுள்ள நீர் வளங்களின் ஆரம்ப பயன்பாடுகள் தொடர்பான உரிமைகளையும், இலங்கையில் ஏற்கனவே நிலவும் சட்ட விதிமுறைகளின் அடிப்படையில் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட நீர் பயன்பாட்டு உரிமைகளையும் அங்கீகரித்து, இந் நாட்டின் நீருடன் தொடர்புடைய பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரிய மதிப்புகளுக்கு முன்னுரிமை வழங்கிய வண்ணம், பல வகைப்படக் கூடிய தேவைகளுக்கான நீர் பயன்பாட்டு உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

அனைத்து உயிரினங்களினதும், சுற்றுச் சூழல் தொகுதிகளினதும் நிலைத்த தன்மைக்குத் தேவையான குறைந்த பட்ச நீர்த் தேவையை இனங் கண்ட வண்ணம், நியாயமான வகையில் நீர் விநியோகிப்பை உறுதிப்படுத்துதல்.

7.4 நீர் வளங்களின் திட்டமிடுகை, மேம்படுத்துகை, நிர்வகிப்பு மற்றும் பாதுகாப்பு

நீர் வளங்களை திட்டமிடும் போது, மேற் தள நீர் வளங்கள் தொடர்பாக மட்டுமின்றி நிலக் கீழ் நீர் வளங்களின் தோற்றுவாய்கள் மற்றும் மழை நீர் சேகரிப்பிற்கான சாத்தியங்களையும் கருத்திலெடுத்தல்.

தேசிய அபிவிருத்தித் தேவைகளின் அடிப்படையில், இயற்கை நீர் வளங்களை திட்டமிடுதல், இயற்கை நீரியல் எல்லைகள் மற்றும் இடைப் பள்ளத்தாக்கு திசை திருப்புகை தொடர்பான சாத்தியப்பாடுகளையும் கருத்திலெடுத்த வண்ணம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

புதிய நீர் வளங்கள் அபிவிருத்தியின் தேவையை அடையாளம் காணும் போது, ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் வளங்களையும், அபிவிருத்தி செய்யக் கூடிய சாத்தியம் கொண்ட இது வரை அபிவிருத்தி செய்யப்படாத நீருடல்களை அதிக செயற் திறனுடனும், வினைத் திறனுடனும் பயன்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும், காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள அல்லது எதிர்வு கூறப்படுகின்ற வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு பாதிப்புகளை குறைக்கக் கூடியவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், விரைவாக சேதங்களை நீக்குதல் அல்லது இசைவாகக் கூடிய செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

நீர் வளங்களின் மாறுபாடுகளையும் பல்வகைப்படும் தேவைகளையும் கருத்திற் கொண்டு, நீர் வளங்கள் அபிவிருத்தியின் போது குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளடங்களாக பன் முக அணுகு முறையை ஏற்றுக் கொள்ளுதல் தொடர்பாக குறிப்பாக கவனம் செலுத்துதல்.

மேற் தள நீர் தோற்றுவாய்கள், நீர் மூலாதாரங்கள் மற்றும் நீரேந்துகளை அண்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய சுற்றுச் சூழல் மாசுபாடு மற்றும் நீரேந்து பிரதேசங்களின் சேதங்களை கண்காணித்தல், நிலக் கீழ் நீர் வளங்களின் மாசாக்கம் மற்றும் அதிகப் படியான உள்ளீர்ப்பை கண்காணித்த வண்ணமும், நிலக் கீழ் நீருடல்களின் சம நிலையை பேணிய வண்ணமும் அனைத்து விதமான நிலக் கீழ் நீர் மூலாதாரங்களையும் நன்னெறி மிக்கதாக பாதுகாத்தல்.

நீர் மூலாதாரங்களின் பாதுகாப்பு, நிலைத்த வாழ் தகவு நிலை மற்றும் வெள்ளப் பெருக்கு கட்டுப்பாட்டையும் தொடர்பு படுத்திய வண்ணம் ஈர நிலங்களை பாதுகாத்தல்.

தொழில்நுட்ப ரீதியாகப் பொருத்தமான கட்டமைப்புகள் மற்றும் நீரியல் வலுச் சக்தி செயன் முறைகளின் பயன்பாட்டின் ஊடாக ஆறுகள் வழியாக நிலப் பகுதியினுள் உவர் நீர் உட் புகுவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

விவசாயம், குடியியல் பயன்பாடு, சுற்றுச் சூழல், கைத்தொழில், மீன் பிடித் துறை, வலுச் சக்தி தோற்றுவாய் மற்றும் பொழுது போக்கு போன்ற தேவைகளுடன் தொடர்புடைய நீர் வளங்களின் திட்டமிடுகை, அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளின் போது, சம்பந்தப்பட்ட தரப்பினரை உரிய முறையில் பங்கேற்கச் செய்தல்.

7.5. தேவைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நீரின் அளவுகளை ஒதுக்கீடு செய்தல்

பல் வகைப்படுத்தப்பட்ட துறை சார்ந்த நீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக, தொடர்புடைய தரப்புகளின் பங்கேற்புடன் தேசிய ரீதியான ஒருங்கிணைப்புடன் கூடியதாக செயற்படுத்தக் கூடியவாறு தெளிவான செயற்பாட்டு இயந்திரத்தை உருவாக்குதல்.

தற்போது நிலவுகின்ற அனைத்து நீர் அளவுகளினதும் தேவைகளையும், கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக காணப்படாது என முன் கூட்டியே கணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கான நீர்த் தேவைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் தேவைகள் ஆகியவற்றை முதன்மை நீர்த் தேவையாகக் கருதி, தொடர்புடைய அனைத்து நீர்த் தேவைகள் தொடர்பாகவும் இணக்கங்களுக்கு வந்த வண்ணம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

தேசிய ரீதியிலான ஒருங்கிணைப்பின் கீழ் எடுக்கப்படும் தீர்மானங்களும், எட்டப்படும் உடன்பாடுகளும் முறையாக செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முகமாக, தொடர்புடைய நிறுவனங்களின் பல்வேறு நிலைகளினாலான செயற்பாட்டு பொறிமுறைகளை ஒருங்கிணைத்தல்.

7.6. பல்வேறு நீர் பயன்பாடுகளின் செயற் திறனையும், உற்பத்தித் திறனையும் உயர்த்துதல்

பல்வேறு நீர் பயன்பாடுகளின் செயற் திறன் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதும், நீர் வளங்களின் மாசுபாடு மற்றும் வீணாக்கத்தை தடுத்தல் மற்றும் அவற்றை அதிக உற்பத்தித் திறனுடன் பயன்படுத்தும் முகமாக ஒழுங்கு முறையாக மையப்படுத்தப்பட்ட நடுத்தர முகாமைத்துவ செயல் முறையையும், மையப்படுத்தப்பட்ட செயற்பாட்டு திட்டங்களையும் அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒருமித்த உடன்பாடுடன் கூடியதாக வடிவமைத்து, அதனுடன் தொடர்புடைய மூலோபாயத் திட்டங்களை அடையாளம் கண்ட வண்ணமும், அவற்றை நடைமுறைப்படுத்திய வண்ணமும் கண்காணித்தல்.

அதற்கான வழிகாட்டுதல்களும், செயல் திறன் அளவு கோள்களும் அறிமுகப்படுத்தப்படுவதுடன், ஒவ்வொரு துறை சார்ந்ததாகவும் தேசிய ரீதியிலான கண்காணிப்பு செயன் முறையை நிலை நிறுத்துதல்.

7.7. பாதுகாப்பு, முகாமைத்துவம், செயற்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகளை பகிர்ந்தளித்தல்

விருத்தி செய்யப்பட்ட நீர் வளங்கள் முகாமைத்துவத்துக்கு உட்பட்ட அணைகள், கட்டுமானங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.

நீரேந்து பிரதேசங்களின் சுற்றுச் சூழல் சேதம், நீர் வள மாசாக்கம் மற்றும் அதிகளவிலான நீர் மீட்டெடுப்பு காரணமாக ஏற்படும் சேதத்திற்கான நட்ட ஈட்டை அறவிடும் செயன் முறையை நிறுவுதல்.

கிராமிய குடி நீர் விநியோகிப்பு, நீர் வளம் சார்ந்த விவசாயம் மற்றும் உளஞர் மீனவத் துறை தொடர்பாக அரசினால் வகிக்கப்படுகின்ற முகாமைத்துவ, செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளை குறைப்பதற்காக, குடிகளை அடிப்படையாகக் கொண்ட இயக்கங்கள் தொடர்பாக இன்றளவிலும் நிறுவப்பட்டுள்ள பங்களிப்பு வழி முறைகளை மேலும் வலுப்படுத்துதல்.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக நேரடியாக பங்களிப்பை வழங்குகின்ற விவசாய மற்றும் நன்னீர் மீனவத் துறையைத் தவிர்த்து, வணிக நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற கைத்தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக மேற் பரப்பு அல்லது நிலக் கீழ் நீர் பயன்பாட்டுடன் தொடர்புடையதாக அரசுக்கு ஏற்க வேண்டிய பாதுகாப்பு, முகாமைத்துவ, செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு தொடர்பான செலவுகளை முதலீடுகளின் வாயிலாக உள்ளடங்கச்

செய்யும் முகமாக செயன் முறையொன்றை அறிமுகப்படுத்துதல். (இச் செயன் முறை, சம்பந்தப்பட்ட கைத்தொழிற்சாலைகள் மற்றும் அவற்றின் அளவியல் வரம்புகள் தொடர்புடைய கட்டணங்கள் முதலியவற்றை கொள்கையை செயற்படுத்துவதுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.)

7.8. தரவு மற்றும் தகவல் முகாமைத்துவம்

தேசிய மட்டத்தில் நீர் வளங்கள் திட்டமிடல், அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை விபரமாகத் தொகுத்து பராமரிக்கும் முகமாக மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றை நிறுவுதல்.

அதற்கமைய, தீர்மானங்களை எடுக்கத் தக்க அளவில் நீர் வளம் தொடர்பான ஒவ்வொரு துறை சார் தரவுகள் மற்றும் தகவல்களை பரிமாற்றிக் கொள்வதற்கு மையப்படுத்தப்பட்ட செயன் முறையொன்றை உருவாக்குதல்.

நீர் வளங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்கையில் தரவு அடிப்படையிலான அறிவியல் அணுகு முறையை பின்பற்றக் கூடியவாறு தொடர்புடைய பொறுப்புகளை வகிக்கின்ற நிறுவனங்களின் தரவுகள் மற்றும் தகவல்களை முகாமைத்துவப்படுத்துவதற்குத் தேவையான அளவில் பௌதீக மற்றும் மானிட வளத்தை விருத்தி செய்தல்.

அரச நிறுவனங்கள் அல்லது பங்குதாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற தரவு சேகரிப்புகள் நகலெடுக்கப்படாத (duplication) வண்ணம் குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு, பரஸ்பர நல்லிணக்க புரிந்துணர்வையும், ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துதல்.

நீர் வளத் துறை சார்ந்ததாக செயற்படுகின்ற நிறுவனங்கள் சேகரிக்கும் மேற் தள நீர் வள மற்றும் நிலக் கீழ் நீர் வளங்கள் தொடர்பான தரவுகளை, பிற நிறுவனங்கள் மற்றும் தரப்பினருடன் பொருத்தமான வகையில் தடையின்றி உரிய முறையில் பரிமாறிக் கொள்ளக் கூடிய வழி முறையொன்றை நிலை நாட்டுதல்.

அரசுக்கு உரித்தற்ற வெளித் தரப்புகளுக்கு தரவு மற்றும் தகவல்களை வழங்கும் போது, அத் தகவல்கள் மற்றும் தரவுகளை சேகரித்தல் மற்றும் தயாரித்தல் தொடர்பாக ஏற்கப்படுகின்ற செலவுகளை உரிய முறையில் அறவிடக் கூடிய வண்ணம், பொதுவாக செயற்படுத்தக் கூடிய நியாயமான கட்டண அறவீட்டு முறையை உருவாக்குதல்.

7.9. ஆராய்ச்சி மற்றும் விருத்தி

நாட்டின் அபிவிருத்திக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்தக் கூடிய நீர் வளத்துடன் தொடர்புடைய மரபுரிமைகள் மற்றும் பண்பாடுகள் உள்ளிட்ட பிற தோற்றுவாய்கள் தொடர்பாக ஒவ்வொரு துறை சார்ந்ததாகவும் ஆய்வு செய்தல்.

நீர் வளத் துறை சார்ந்த புதிய பரிமாணங்களை ஆராயும் முகமாக, நவீன அறிவியல் ஆய்வு முறைகளைப் பின்பற்றி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினருடன் கூட்டிணைந்து மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தி அவற்றை முன்னெடுத்தல்.

நீர் வளத் துறையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் முடிவுகள் மற்றும் கண்டுபிடிப்புகளை, தொடர்புடைய அபிவிருத்தித் திட்டமிடுவோர், பயனாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோருக்கிடையில் பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் தேவைக்கேற்ப அவற்றை வெளியிடுதல்.

நீரியல் மற்றும் நீர் இயக்கப் பொறிமுறையை அடையாளம் காணும் பொருட்டு அறிவியல் ரீதியாக செல்லுபடியான ஆய்வு மாதிரிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதன் வாயிலாக, நீர் வளங்களை மேம்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்யக் கூடிய செயன் முறைகளை மேற்கொள்ளுதல்.

7.10. பயிற்சி மற்றும் கொள் திறன் மேம்பாடு

தமக்குரிய பங்குகளை திறம்படவும், வினைத் திறனுடனும் முன்னெடுக்கக் கூடியவாறு, நீர் வளத் துறையுடன் தொடர்புடைய நபர்களை பயிற்றுவித்தல் மற்றும் பொருத்தமான வகையில் தேவையான பௌதீக வளங்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் திறன் விருத்தியை மேற்கொள்ளுதல்.

நீர் வளங்களின் பாதுகாப்பு, வினைத் திறன் மற்றும் நன்னெறி மிக்க பயன்பாடு குறித்து, நேரடி மற்றும் மறைமுக பயனாளர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் திறன் மேம்பாட்டின் வாயிலாக அவர்களினது பங்களிப்புகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான திறனையும், மனப்பாங்கையும் விருத்தி செய்யக் கூடிய வழி வகைகளை முன்னெடுத்தல்.

நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் வினைத் திறன் மிக்க மற்றும் செயற் திறன் மிக்க பயன்பாடு தொடர்பான அடிப்படைக் கல்வியை, பாடசாலை பாடத் திட்டத்தின் வாயிலாக வழங்குவதன் ஊடாக, இவ் விடயம் தொடர்பான நன்னெறி மிக்க மனப்பாங்கை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. செயற்படுத்தும் பொறிமுறை

இக் கொள்கை செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, நீர் வளத் திட்டமிடல், அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய செயற் பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக பொறுப்புகளை வகிக்கின்ற நிறுவனங்களையும், பிற தொடர்புடைய தரப்பினரையும் பங்கேற்கச் செய்த வண்ணம், தேசிய மட்டத்தில் ஒருங்கிணைந்த அணுகு முறையின் அடிப்படையில் செயற்படுதல் அவசியமான விடயமாகக் காணப்படுகின்றது. தேசிய ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மிக முக்கியமான சந்தர்ப்பங்களிலும், வரட்சி மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்த நிலைகளிலும், தொழில்நுட்ப ரீதியானதும், சமூக மற்றும் அரசியல் சூழ் நிலைகளையும் கருத்திற் கொண்டு தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு ஆலோசனைகளை வழங்கும் முகமாக **நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழுவும் (Committee of Ministers on Water Resources Policy)**, தேசிய மட்டத்திலான தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு **தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவும் (National Water Resources Management Committee – NWRMC)**, அக் குழுவிற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்கும் நிமித்தமும், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிமித்தமும் நீர்ப்பாசன விடயப் பரப்பு பொறுப்பான அமைச்சின் கீழ் **தேசிய நீர் வளங்கள் செயலகமும் (National Water Resources Secretariat – NWRS)** நிலை நிறுத்தப்படும்.

8.1. தேசிய நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழு (Committee of Ministers on Water Resources Policy)

8.1.1 பணிப் பொறுப்பு

தேசிய ரீதியாக தாக்கம் ஏற்படக் கூடிய முக்கியமான சூழ் நிலைகளிலும், வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்த நிலைகளிலும், தொழில்நுட்ப ரீதியிலான, சமூக மற்றும் அரசியல் சூல் நிலை போன்ற அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவ குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குவதும், மேன் முறையீடுகள் மற்றும் பொது மக்களினது மனக் குறைகளை பரிசீலித்து அவை தொடர்பாக இறுதித் தீர்மானங்களை முன் வைப்பதும் **நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழுவின் (Committee of Ministers on Water Resources Policy)** பணிப் பொறுப்பாகும்.

8.1.2. குழுவின் உள்ளடக்கம்

கீழ்க் காணும் உறுப்பினர்களை உள்ளடக்கிய தேசிய நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியவர்களினால் நியமிக்கப்படும்.

1.	பிரதம அமைச்சர்	-	தலைவர்
2.	நீர்ப்பாசன விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
3.	விவசாய விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
4.	நீர் வழங்கல் விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
5.	வலுச் சக்தி விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
6.	சுற்றாடல் விடயப் பரப்பு அமைச்சர	-	அங்கத்தவர்
7.	கைத்தொழில் விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
8.	கடற்றொழில் விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
9.	சுற்றுலாத் துறை விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
10.	அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்
11.	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயப் பரப்பு அமைச்சர்	-	அங்கத்தவர்

இக் குழுவிற்குத் தேவையான வசதிகளை வழங்கும் மற்றும் ஆவணங்களை பராமரிக்கும் செயற்பாடுகள், தேசிய நீர் வளங்கள் செயலகத்தினால் (National Water Resources Secretariat – NWRS) முன்னெடுக்கப்படும்.

8.2. தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழு (NWRMC)

8.2.1 பணிப் பொறுப்பு

இலங்கையில் நீர் வளங்களின் திட்டமிடல், அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய தேசிய மட்டத்திலான நுணுக்கமான தீர்மானங்களை எட்டுகையில் உயர் நிலை அதிகாரத்துடனும், ஒருங்கிணைந்த அணுகு முறையுடன் கூடியதாகவும் செயற்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, **தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழு**, சனாதிபதி செயலாளரினால் நிறுவப்படும்.

தேசிய ரீதியாக பாதிப்பு ஏற்படக் கூடிய விசேடித்த சந்தர்ப்பங்களிலும், தீவிர வரட்சி அல்லது வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்த நிலைகளிலும், அத்தகைய அனர்த்தங்களை சரி செய்கையில் நீர் வளங்களை முகாமைத்துவம் செய்ய வேண்டிய செயல் வழி முறை தொடர்பாக தீர்மானிக்கையில், தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழு, தேசிய நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழு ஆகியவற்றின் ஆலோசனைகள் பெறப்படும்.

8.2.2 குழுவின் உள்ளடக்கம்

(1)	பிரதம அமைச்சரின் செயலாளர்	-	தலைவர்
(2)	நீர்ப்பாசன விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர	-	அங்கத்தவர்
(3)	விவசாய விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(4)	நீர் வழங்கல் விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(5)	வலுச் சக்தி விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(6)	சுற்றாடல் விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(7)	கைத்தொழில் விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(8)	கடற்றொழில் விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(9)	சுற்றுலாத் துறை விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(10)	அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(11)	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயப் பரப்பு அமைச்சின் செயலாளர்	-	அங்கத்தவர்
(12)	சனாதிபதி செயலாளரினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதியொருவர்	-	அங்கத்தவர்
(13)	பணிப்பாளர் நாயகம், தேசிய நீர் வளங்கள் செயலகம்	-	அங்கத்தவர்

8.2.3 வரவேற்கப்பட்ட பிரதிநிதிகள்

தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு மேலதிகமாக தேவைப்படக் கூடிய தொழில்நுட்ப ரீதியிலான உதவியை பெற்றுக் கொள்ளும் முகமாக, தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் அல்லது விடயப் பரப்பு நிபுணர்களை தேவைக்கேற்ப அழைப்பதற்கான அதிகாரம் குழுவின் தலைவர் வசம் காணப்படும்.

8.2.4 மதியுரை ரீதியிலான பிரதிநிதித்துவம்

தேசிய நீர் வளங்கள் குழுவின் நிரந்தர அங்கத்தவர்களினால் ஏதாவதொரு விடயம் தொடர்பாக விசேடித்த ஆய்வுகள் மேற்கொள்வது அத்தியாவசியமானதென தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நீரியல், சுற்றுச் சூழல், பொருளாதார, சட்ட ரீதியிலான, பூகோளவியல் திட்டங்கள் போன்ற துறை சார்ந்ததாக உயர் திறன் பெற்ற நிபுணர்கள் அல்லது அவ் விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய பல்கலைக்கழக விரிவுரையாளர்களை உள்ளடக்கிய மதியுரை குழுக்களை மதியுரை சேவைகள் தொடர்பாக ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் காணப்படும்.

8.3. தேசிய நீர் வளங்கள் செயலகம் (NWRS)

8.3.1. பணிப் பொறுப்பு

ஒருங்கிணைந்த அணுகு முறையுடன் கூடிய தேசிய ரீதியிலான உபாய வழித் தீர்மானங்களை எடுக்கும் முகமாக தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு உதவும் பொருட்டு நீர்ப்பாசன விடயப் பரப்பு அமைச்சின் கீழ், ஒரு பிரிவாக நிலை நாட்டப்படுகின்ற தேசிய நீர் வளங்கள் செயலகத்தினால் பின்வரும் செயற் பணிகள் முன்னெடுக்கப்படும்.

- நீர் வளங்களுடன் தொடர்புடைய நிறுவனப் பிரவேசிப்புகளை, ஒருங்கிணைந்த மற்றும் பங்கேற்பு பிரவேசிப்புடன் கூடியதாக முன்னெடுக்கும் பொருட்டு தேசிய ரீதியிலான செயற்பாட்டு மற்றும் மேற்பார்வை பொறிமுறையாக செயற்படுதல்.
- இக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான குறுகிய, இடைக் கால மற்றும் நீண்ட கால உபாய வழித் திட்டங்களை தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த வண்ணம் தயாரித்தல்.
- தேசிய ரீதியிலான ஒருங்கிணைந்த முகாமைத்துவ அணுகு முறையுடன் கூடிய தீர்மானங்களை எடுப்பதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான வகையில், நீர் வளங்களில் நிலவுகின்ற நிலைப்பாடுகள், அவற்றின் பயன்பாட்டுத் தன்மை மற்றும் நீர் மாசுபாடு தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்ட புதுப்பிக்கப்பட்ட தரவுகளையும், தகவல்களையும் பேணிப் பாதுகாத்தல்.
- அரச நிறுவனங்கள் மற்றும் பிற தரப்பினரிடமிருந்து நீர் வளங்கள் மற்றும் நீருடல்களின் பயன்பாட்டுடன் தொடர்புடையதாக முன் வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் அதற்குரிய தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தொகுதியொன்றை பராமரித்தல்.
- நீர் வளங்கள் மற்றும் நீருடல்களின் பயன்பாட்டுடன் தொடர்புடையதாக கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய நிறுவனங்களின் பரிந்துரை / அங்கீகாரம் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அத் தொழில்நுட்பத் தீர்மானங்களை முற்று முழுதாக பகுப்பாய்வு செய்து, மீளவும் பொருத்தமான தீர்மானங்களுக்கு வரும் நிமித்தம் தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு அதனை சமர்ப்பித்தல்.

- நீரின் அளவு, நீருடல்கள் அல்லது நீர் தோற்றுவாய்களை பகிர்ந்து கொள்கையில் அல்லது ஒதுக்கிடும் போது பிரச்சினைகள் உருவாகும் சூழ் நிலைகளின் போது, சந்தர்ப்பத்துக்கேற்ப தலையீட்டாளராக செயற்படுதல் அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் தீர்மானமெடுக்கும் பொருட்டு தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு அதனை சமர்ப்பித்தல்.

- உத்தேச சுயாதீன மேன் முறையீட்டுக் குழுவின் செயன் முறைக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பராமரித்தல்.

- நீர் வளத் துறையுடன் தொடர்புடைய விடயப் பரப்பு சார்ந்த துறை சார்ந்த கொள்கை உருவாக்கத்தின் போது வழிகாட்டுதல்களை வழங்குதல்.

- தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்களை அறிவித்தல், அத் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், அது தொடர்பான பின்னாய்வு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.

- ஒட்டு மொத்தமாக இக் கொள்கையை செயற்படுத்துவதற்கு தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு உதவி வழங்குதல் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

- தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற பிற பணிகளை நிறைவேற்றுதல்.

8.3.2. உள்ளடக்கம்

நீர் வளங்கள் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் சார்ந்த விடயப் பரப்பு அறிவு மற்றும் அனுபவம், தொடர்பாடல் திறன் மற்றும் பேச்சு வார்த்தை இணக்கப்பாட்டு ஆற்றல் பெற்ற முது நிலை நிபுணரொருவர், முழு நேரமாக தேசிய நீர் வளங்கள் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுவார்.

நீர் வளங்கள் ஆய்வுகள் அல்லது முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மற்றும் திறன் பெற்றுள்ள அல்லது தொடர்புடைய தரவுத் தொகுதிகளை பராமரிக்கின்ற முக்கியமான பங்குதார நிறுவனங்களை பிரதி நிதித்துவப்படுத்தும் முகமாக, அந் நிறுவனத் தலைவர்களினால் முழு நேரப் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்ற, தொழில்நுட்ப அல்லது நிபுணத்துவ அறிவுத் திறனுள்ள, குறைந்தது ஒரு முது நிலை அதிகாரி எனும் அடிப்படையில், அவர்களினது பதவியுயர்வு வாய்ப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம், தேசிய நீர் வளங்கள் செயலகத்தின் தொழில்நுட்ப சேவை பிரிவிற்கு பிற உத்தியோகபூர்வ பொறுப்புகளிலிருந்து விடுவித்து முழு நேர அடிப்படையில் பணிக்கு இணைப்பு செய்யப்படுவார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிக் குழுவிற்கு மேலதிகமாக, தேவைக்கேற்ப பிற பல்வகைத் துறைகளுக்கு உரித்தான தொழில் முறை சார்ந்த நிரந்தர பணிக் குழுவும், உதவி பணிக் குழுவும் நியமிக்கப்படும்.

9.0. மேன் முறையீட்டு செயன் முறை

இலங்கையின் நீர் வளத்துடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் தொடர்பாகவும், ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது தேசிய நீர் வளங்கள் செயலகத்தினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு பரிந்துரை அல்லது தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்படுகின்ற தீர்மானங்கள் குறித்து, அதிருப்தியடையும் தரப்பினருக்கு, குறித்த விடயம் தொடர்பான மேன் முறையீட்டை, நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் தேசிய நீர் வளங்கள் செயலகத்துக்கு முன் வைக்கலாம்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு மேன் முறையீடும் அல்லது மறு பரிசீலனைக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள், தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் சமூக ரீதியிலான நிலைகளையும், அவற்றைத் தீர்க்கும் முகமாக வழங்கக் கூடிய மாற்று முன் மொழிவுகளும் ஆராயப்பட்டு தீர்மானத்தை வழங்கும் பொருட்டு, தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவிற்கு அக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவக் குழுவினால் மீளவும் வழங்கப்படும் தீர்மானம் தொடர்பாக மேலும் அதிருப்தியடையும் தரப்பினர், அது தொடர்பாக மீளாய்வு செய்து இறுதித் தீர்மானத்தை முன் வைக்கும் கோரிக்கையை, தேசிய நீர் வளங்கள் செயலகத்தின் ஊடாக நீர் வளங்கள் கொள்கை தொடர்பான அமைச்சர் குழுவிற்கு சமர்ப்பிக்கலாம். அவ் அமைச்சர் குழுவினால் இது தொடர்பாக மீளவும் பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற தீர்மானம் இறுதித் தீர்மானமென அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

--o—

பின்னிணைப்பு

இக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்தப்பட வேண்டிய, அதன் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க் காணும் சொற் பதங்கள் தொடர்பான விளக்கக் குறிப்புகள் பின்வருமாறு அமையும்.

1. பலனாளிகள்

இக் கொள்கை அறிக்கையின் அடிப்படையில் பலனாளிகள் என பொருள் கொள்ளப்படுவது, நேரடியாக அல்லது மறைமுகமாக நீர் வளத்தை பயன்படுத்தும் நபர்கள், நீர் வளத்துடன் தொடர்புடைய வாழ்வாதாரத்திற்கான நீர் மூலாதாரங்களை பயன்படுத்துபவர்கள் அல்லது வணிக நோக்கங்களுக்காக நீர் மூலாதாரங்களை பயன்படுத்துபவர்கள் ஆவார்கள்

2. பங்குதாரிகள்

இக் கொள்கை அறிக்கையில் தொடர்புடைய தரப்பினர் என பொருள் கொள்ளப்படுவது, நீர் வளத் திட்டமிடல், விருத்தி செய்தல், முகாமைத்துவம்இ பகிர்ந்தளிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள மற்றும் அதன் பிரகாரம் செயற்படுகின்ற அமைச்சுகள், அரச திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் அல்லது மேற்குறித்த பணிகளுக்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிற அரச, பகுதி அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவாகும்.

3. முதன்மைப் பயன்பாடுகள்

இக் கொள்கை அறிக்கையில் முதன்மைப் பயன்பாடுகள் என பொருள் கொள்ளப்படுவது, இன்றளவிலும் பல்வேறு தேவைகளுக்காக அரசினால் விருத்தி செய்யப்பட்டுள்ள நீர் வளங்கள் கருத்திட்டங்களை திட்டமிடுகையிலும், பயன்பாட்டின் போதும் எதிர்ப்பார்க்கப்படுகின்ற மற்றும் இது வரை பெறப்படுகின்ற அடிப்படை பலன்களாகக் காணப்படுகின்றன.

4. ஆற்றுப் பிடிப்புப் பகுதி பயனாளர்கள்

இக் கொள்கை அறிக்கையில், ஆற்றுப் பிடிப்புப் பகுதி பயனாளர்கள் என பொருள் கொள்ளப்படுவது, ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள் மற்றும் இயற்கை நீர் நிலைகளின் கரைப் பகுதிகளுக்கு அண்மையில் வசிக்கின்ற காணி உரிமையாளர்கள் ஆவார்கள். இத்தகையோர் அரச காணிக் கட்டளை சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு இசைவாக, குடியியல் தேவைகள், குடியியல் பயன்பாட்டுடன் தொடர்புடைய விலங்கினங்கள் மற்றும் கால்நடைகள் மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக நீரை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள ஆவார்கள்.

5. நீருடன் தொடர்புடைய மரபுரிமைகள்

இக் கொள்கை அறிக்கையில் நீருடன் தொடர்புடைய மரபுரிமைகள் என பொருள் கொள்ளப்படுவது, தேசிய, மத மற்றும் கலாச்சார விழாக்கள் தொடர்பாக தேவையாகும் மற்றும் பாரம்பரிய ரீதியாக சமூகத்தில் இணக்கம் வழங்கப்படுள்ள நீர் பயன்பாட்டு நடைமுறைகள் ஆகும்.

6. ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம்

இக் கொள்கை அறிக்கையில் ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம் என பொருள் கொள்ளப்படுவது, ஒவ்வொரு துறை சார்ந்த நீர்த் தேவைகளான விவசாயம், குடியியல், கைத்தொழில், சுற்றுலாத் துறை போன்ற துறைகள் மாத்திரமன்றி, எதிர்க்காலத்தில் அடையாளம் காணப்படும் பிற துறைகளின் நீர்த் தேவைகளையும் முழுமையாகக் கருத்திற் கொண்டு, தனித் தனி நீர் மூலாதாரங்களிலிருந்து அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மூலாதார வளங்கள் துறை சார்ந்ததாக எதிர்ப்பார்க்கப்படும் பயன்கள், அனர்த்த முகாமைத்துவம், சுற்றுச் சூழல் தேவைகள் மற்றும் தொடர்புடைய துறைகளின் பங்கேற்பு போன்ற அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு நீண்ட கால, இடைக் கால மற்றும் குறுகிய கால திட்டங்களை உருவாக்கி, அவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு துறை சார்ந்ததாகவும் தேவையான அபிவிருத்திகளை முன்னெடுத்து, அத் திட்டங்களுக்கு ஏற்ப முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திஇ கண்காணிக்கும் செயன் முறையாகும்.

7. பல்வகைப்படுத்தப்பட்ட துறை சார்ந்த நீர்த் தேவைகள்

இக் கொள்கை அறிக்கையில் பல்வகைப்படுத்தப்பட்ட துறை சார்ந்த நீர்த் தேவைகள் எனப் பொருள் கொள்ளப்படுவது, விவசாயம், குடியியல், கைத்தொழில், சுற்றுலாத் துறை போன்ற இன்னோரன்ன துறை சார்ந்த நீர்த் தேவைகள் மட்டுமன்றி, எதிர்க்காலத்தில் அடையாளம் காணப்படும் பிற துறைகளின் நீர்த் தேவைகளையும் குறிக்கும். மேலும், இவ்வாறான தேவைகள் சமூக - பொருளாதார தேவைகளின் அடிப்படையில் காலத்திற்கேற்ப மாறுபடக் கூடியனவாகக் காணப்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.